பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்–
பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்
(எஸ்1) துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.

**கடித (நிலை) எண்.103 , நாள் 17.08.2012**

அனுப்புநர்
திரு தங்க கலியபெருமாள், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆணையர்,
சிறுபான்மையினர் நலத்துறை,
சென்னை–2

ஐயா,

பொருள் : சிறுபான்மையினர் நலம் – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் – வாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் – 2012–2013–ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது – பயனாளிகளுக்கு நலத்திட்ட வழங்கும் தொகை விடுவிக்க கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்பியது – தொடர்பாக..

பார்வை : 1. தங்கள் கடித எண் 1206/டிஎம்5/2012, நாள் 24.5.2012, 14.6.12 மற்றும் 19.7.2012
2. அரசு கடித எண் 3843/எஸ்1/2012–2, நாள் 4.7.2012

*******

பார்வையில் காணும் கடிதங்களின் மேல் தங்களின் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். பார்வை 1–ல் காணும் கடிதத்தில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு உதவிகள் வழங்கிட 2012–13–ம் ஆண்டு வரவு, செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1 கோடியை விடுவிக்க கோரி முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பியுள்ளீர்கள்.

2. இக்கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்ததில் மாநில கணக்காய்வு துறை தேவையை விட அதிகம் மதிப்பீடு செய்யப்பட்டு, அதிக நிதி ஒதுக்கீடு பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள நிலையில் தங்கள் பொது வைப்பு கணக்கில் (PD Account) உள்ள ரூ.65.87 இலட்சத்திலிருந்து நடப்பாண்டிற்கான தேவையை மேற் கொள்ளுமாறும், தேவைப்படின் அதற்கான நிதியை தனியே கருத்துரு அனுப்பி பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா. எண் 01/JS(RMD)/2012, நாள்:8.8.2012–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.